# ஏழிசைக் கோவைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

பாலாம்பிகை இராஜேஸ்வரன்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

## இசைத் தமிழின் தொன்மை

உலகிலுள்ள மிகவும் தொன்மையான மொழிகளுள் ஒன்று நம் தாய் மொழியாம் தமிழ்மொழி ஆகும். தமிழ்மொழி வேறு மொழிகளுக்கு இல்லாத சிறப்பாகிய இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்று பெரும் பிரிவுகளைப் பெற்று முத்தமிழ் என்ற சிறப்புடன் சங்ககாலம் முதல் இன்று வரையும் திகழ்ந்து வருகின்றது. மேலும், ஒரு நாட்டின் மரபினையும், கலை மற்றும் கலாசார வளத்தினையும், புலப்படுத்தும் இசைக்கலையின் திறம் ஒரு நாட்டவர் பேசும் தாய் மொழியினை நிலைக்களமாகக் கொண்டதால்தான் புகழுடன் திகழ இயலும், அயலவரின் புறக்கணிப்பால், பகைவர்களின் அலைக்கழிப்பால் தமிழிசை நிலைகுலைந்தது. தமிழிசையின் தோற்றம் குறித்துப் பொய்யான உரைகளும், புனைந்துரைகளும் பெருகியது. முத்தமிழான இயற்றமிழ் வடமொழிப்பட்டதென்றும், இசைத்தமிழ் கர்நாடக இசையில் கிளைத்ததென்றும், நாடகத் தமிழ் பரதசாத்திரத்தின் வழி நடப்பதென்றும் நிறுவ முயலும் அழிவுரைகள் நிலவி வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில்தான் இறைவனின் தூதுவர்களாய் அவதரித்த பெரியார்கள் தமிழிசையின் சிறப்பினை மக்களுக்கு உணர்த்திவருவதை காணமுடிகின்றது.

## இசை இலக்கண நூல்கள்:

பண்டைய காலந்தொட்டே இசை இலக்கண நூல்கள் பல இருந்ததையும், இசை இலக்கணம் மிகவும் நுணுக்கமாகக் கையாளப்பட்டு வந்துள்ளதையும், இறையனார் அகப்பொருள் உரை மூலம் முதுநாரை, முதுகுருகு. சிற்றிசை, பேரிசை, யாப்பருங்கல விருத்தி உரை மூலம் மகிழிசை, நுண்ணிசை, உயிரிசை, ஆற்றிசை, சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் மூலம், ஆசிரியமாலை, அடியார்க்கு நல்லாரின் உரை மூலம், பெருநாரை, பொருங்குருகு, பஞ்சபாரதீயம், பரதசேனாதிபதியார் நூல், பஞ்சதாளப்பிரபந்தம், சிகண்டியா இயற்றிய இசை நுணுக்கம், அறிவனார் இயற்றிய பஞ்சமரபு, மதிவாணர் நாடக நூல் போன்ற நூல்கள் மூலம் நன்கு அறியமுடிகிறது. தென்னக இசை மரபு வான்மீகி இராமாயணம் காலந்தொட்டு அடியாக்கு நல்லார் காலம்வரை படிப்படியாக வளர்ச்சியினைப் பெற்றதோடு தமிழிசையின் சிறப்பினையும் நன்கு உணர்த்துகின்றது இத்தகைய சிறப்பினையுடைய தமிழிசையில் ஏழ்கோவைகளின் வளர்ச்சியினைப்பற்றி நோக்குவோம்.

இசை என்ற வார்த்தை "இயை" என்ற வேர்ச் சொல்லில் பிறந்ததாகும். "இயைபே புணர்ச்சி" (தொல்-உரி-11) என்பதன் பொருள் பொருந்துதல், ஒத்துசேர்த்தல், கூடிநிற்றல், புணர்தல் என்று கூறப்படுகின்றது. இயைபு என்ற சொல் "இயைப்பு" என்று மாறி "இசைப்பு" ஆகியது. எனவே இசைப்பு இசை ஆகும் "தொல்-உரி-12" இதிலிருந்து இசை என்று அழைக்கப்பட்டது.

"யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு
இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்"
(சிலப்.அரங்.26-28)

என்ற வரிகள் மூலம் இசை என்ற சொல்லுக்கு பொருள் அறியப்படுகிறது.

நாம் தற்போது நமது இசை முறையில் ஸ்வரம் என்ற வடமொழிச் சொல்லையே அதிகமாகப் பயன்படுத்தி வருவதை அனைவரும் நன்கு அறிவோம். ஸ்வரம் "ஸவயம்" + ரம் "ரஞ்சனை" = ஸ்வரம் சுயமாகவே ரஞ்சனையைக் கொடுக்கும் ஒலியே "ஸ்வரம்" எனப்பட்டது. சுயமாகவே இனிய ஒலியினைத் தன்னில்தானே பெற்று ஒலிப்பதால் ஸ்வரம் என்று அழைக்கின்றோம்.

ஸ்வரம் என்பதற்கு தமிழில் கோவை, நரம்பு, தந்திரி, கோல் எனப் பல பெயாகளால் பண்டைக்காலத்தில் பெரும் வழக்கில் இருந்து வந்துள்ளதைப் பின்வரும் பாடல் சான்றுகள் மூலம் அறிகின்றோம்.

ஏழும் யாழின் இசை கெழு நரம்பே (பிங். 1402)[6]
கோலே தந்திரி குரலிவை நரம்பே (பிங். 1434)[7]
பிழையா மரபின் ஈரேழ்கோவை (சிலப்.3,31)[8]
நிறைந்த நரம்பு நிகழும் பண் எனல் (பிங். 1425)[9]
மெய்கிளை நரம்பின் கைக்கிளை கொள்ள (சிலப்.3.74)[10]
அளபிறந்து யிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர் ( எழு.அதி.33)

இதில் "இசையொடு சிவணிய நரம்பின் மறைய" என்னும் இசைத்தமிழ் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கத்தில் ஏழு ஸ்வரங்களும் நரம்புக் கருவியில் கண்டபிடிக்கப்பட்டதால், நரம்பு என்ற சொல்லே முந்தியது எனக் கருதப்படுகின்றது. பின்பு நாளடைவில் அரை ஸ்வரங்களை ஒன்றுடன் ஒன்று கூட்டி பன்னிரண்டு நிலங்களையும் (ஸ்வரத்தானங்கள்) கண்டுபிடித்தபோது அவற்றைக் கோவைகள் என அழைத்தனர். ஸ்வரங்கள் ஒன்றோடு ஒன்று கோர்க்கப்படுவதால், முதற் கோவையுடன் (குரலுடன்) மற்ற கோவைகள் ஓரளவிற்கு ஒலி அமைப்பில் கோர்க்கப்படுவதால் கோவை என்ற பெயர் மிகவும் சிறப்புடையதாகும் என முனைவர் சு. சியாமகிருஷ்ணன் கூறுகிறார். இசை ஒலியை அளந்து நிறுத்தும் கோலின் அடிப்படையில் இசைக் கோவையானது "கோல்" எனப் பெயர்பெற்றதாக, மதுரைத் தமிழ்ச் சங்க அகராதி மூலம் அறிகின்றோம். எனவே மேற்கூறியவற்றின் வாயிலாகச் ஸ்வரங்களுக்குப் பண்டைத் தமிழிசையில் நரம்பு, கோவை, கோல், தந்திரி எனப் பல பெயர்கள் காரணத்துடன் இடம்பெற்று வழங்கப்பட்டமையை அறிகின்றோம். ஏழிசைக்குரிய ஏழு எழுத்தினை திவாகரர் கீழ்க்கண்டவாறு எடுத்து இயம்புகின்றார்.

"சவ்வும் ரிவ்வும் கவ்வும் மவ்வும்
பவ்வும் தவ்வும் நிவ்வும் என்றிவை
ஏழுமவற்றின் எழுத்தே யாகும்"

திவாகரத்தில் (கி.பி8) "ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் இவ்வேழ் எழுத்தும் ஏழிசைக்குரிய" ஷ என்னும் செய்யுள் வாயிலாக இவ்வேழ் எழுத்துக்களும், ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஸ்வரங்கள் புகும் முன்பு ஏழு கோவைகளை உணர்த்தியது என்பதும், இவற்றைக் கொண்டே கோவைகள் பாடப்பட்டது என்பதும் எழுத்து ஒலிக்கும், இசை ஒலிக்கும் நமது நாட்டு இசை முறையில் மட்டுமே ஒற்றுமை காணப்படுகின்றது. வேறு எந்த இசை முறையிலும் இல்லை என்பதும் ஆய்வாளரின் முடிவாகும்.

குரல் கோவையே பிற கோவைகள் ஒலிப்பதற்கு அடிப்படையாகும். குர + அல் = குரல் என்பதற்கு வேர்ச்சொல் பெருண்மை, பற்றுமை என்பதாகும்.

"ஒற்று உறுப்பு உடைமையின் பற்றுடன் சேர்த்தி" (சிலப். 13.108) "குரல் புணர்சசீர்க் கொளை வல் பாணமகன்" (புறநா. 11.15) ஆகிய பாடல்கள் பாடல்கள் மூலம் நரம்பைப் பற்றாக வைத்துத்தான் பிற நரம்புகள் ஒலியில் உயர்ந்து செல்வதோடு வெவ்வேறு தரத்தில

ஒலிக்கின்றதையும் குறிக்கின்றது. தற்போது இக்கோவைதான் சட்ஜம் "ஸ" என்று அழைக்கப்படுகின்றது.

குரல் கோவையை விட சற்று ஒலியில் உயர்ந்தது இரண்டாவது கோவையாகும். "உயர்ந்து அமைந்த வயிறும்" – "துத்தம்" (பிங். 364) எனப்பட்டது. இக்கோவையைப் தற்போது "ரிஷபம்" – "ரி" என்று அழைக்கின்றோம்.

அகத்திணையில தலைவன் மட்டும் ஒரு நங்கையைக் காதலிக்கும் செயல் ஆதலால், சிறுமைக் காதல் உறவு எனப்பட்டது போல இசை இயலிலும் சிறுமை ஒலி உறவு எனப் பொருள்படும் வகையில் கைக்கிளையானது, இளி (ப), உழை (ம) எனும் இரு கோவைகளைவிட, ஒத்திசைக்கும் தன்மையில் குறைந்தால் "கைக்கிளை சிறுமை உறவு" எனப் பொருள் பெற்றது "காந்தாரம் - க" என அழைக்கப்படுகின்றது.

கைக்கிளையை (க) விட குரலுக்கு (ஸ) சிறிது அதிகமாக ஒத்திசைக்கும் தன்மையினை உடையது உழை (ம) கோவையாகும். உழை என்பதற்கு அகராதிப் பொருள் "பக்கம்" என்பதாகும். அரசரின் பக்கத்தில் நின்று உதவும் அமைச்சருக்கு உழையர் எனறு பெயர் உண்டு. குரல் உழையாக ஒத்திசைப்பது கிளையாகும். எனவே குரலுக்குப் பக்கத்தில் (உழ) எனப்படுவதாகும். தற்போது ம-மத்யமம் என வழங்கப்பட்டு வருகின்றது.

குரலுடன் (ஸ) இளி (ப) கோவை மிகவும் நெருங்கி இணைந்து ஒத்து இசைப்பது ஆகும். இளிதல் என்பதின் அகராதிப் பொருள் இணைதல்-பொருந்துதல் என்று பொருள்படுவதோடு, பழந்தமிழிசையின், குரல் இளியை இணைத்துக் கேட்டல் சிறப்பிடம் பெறுகின்றது.

> "இணை கிளை நட்பு பகை என்ற இந்த நான்கின்
> இசைபுணர் குறிநிலை எய்த நோக்கி" (சிலப்.வேனிற்.33-34)

என்ற செய்யுள் மூலம் இளங்கோவடிகள் இணை என்ற இசைப் புணர்ப்பு நிலையை முதற்கண் வைத்து முதன்மை ஈந்தார். இதன் வாயிலாக குரலுடன் மிகவும் நெருங்கி இணையும் கோவையே இளி (ப) "கோவையாகும்"

> "ஏற்றிய குரல் இளி என்ற இரு நரம்பின் ஒப்பக்கேட்கும் உணர்வின்"

> "இணை நரம்பு உடையன அணைவுறக் கொண்டு" (சிலப். 3-90)

> "ஏழாம் நரம்பு இணை, நாலு நட்பாகும்
> ஐந்து கிளை, ஆறும் மூன்றும் பகையே"

(கல்லாடச் செய்யுள் உரையில் இசை மரபுடையாரின் பாடல்) ஆகிய பாடல் வரிகளின் உரை மூலம் குரல் (ஸ) இளி (ப) உறவினை அறிவதோடு, இளிக்கு இணை நரம்பு "பட்டடை நரம்பு" என்ற பெயர் வழங்கப்பட்டதை அறிகிறோம். இளிக்கிரமம், இளிக்கிழமை என்பது குரல்-இளி உறவு கோவை கொள்ளல் "ஸ-ப" ஆகும். தற்போது வழக்கத்தில் இக்கோவை ப-பஞ்சமம் எனப்படுகின்றது.

இளி – (ப)க்கு அடுத்த இரு கோவைகளாகிய விளரி (த) தாரம் (நி) இரண்டில் விளரியை விட மிக உயர்ந்து ஒலிப்பது தாரம் என்பதால் அதனினும் (விளர்தலாக) மென்மையாக ஒலிப்பது என்ற பொருளில் விளரி என்றி பெயர் பெற்றது.

> "இளமையும் கொழுப்பும் விளர் என்று சைக்கும்" (பிங். 4085)
> தார நரம்புடன் ஒப்பிட்டு இட்ட பெயர் விளரியாகும்.

ஏழிசைக் கோவைகளில் தாரமே (நி) மிகவும் உயர்ந்து ஏலிப்பதோடு இறுதியில நிற்பதாகும் "உச்சதாரம் ஓங்கும் வல்லிசை" என்று திவாகர நிகண்டு ஒலிப்பெயர் தொகுதியில் உரைக்கின்றது. தார் என்றால் மேல் ஓங்கியது என்ற பெயரைக் குறிப்பதோடு தார்ப்படை

முன்னணிப்படை எனவும் பொருள்படுகின்றது. எனவே, தார்நிலையில (மேலோங்கிய நிலையில்) ஒலிப்பது தாரக் கோவையாகும். தற்காலத்தில நி-நிஷாதம் என அழைக்கப்பட்டு வருகின்றது.

## குரல் துத்தம் முதலிய ஏழிசைப் பெயர்க்கரணம்

இசைச் "சுரங்களை"க் கோவை அல்லது நரம்பு என்னும் தமிழ்ச் சொற்களால் என்றும் எவரும் குறித்துப் பேசினால் மாபெரும் அறிஞர் மறைமலையடிகளின் ஆன்மா மகிழும். ஏழு நரம்பு இசைகளையும் ச. ரி. க. ம. ப. த. நி என்னும் இவற்றின் சமஸ்கிருதப் பெயர்கள், சட்சம். ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பன. இவ்வாறு இந்த ஏழு நரம்புகளும் பெயர் பெற்றமைக்கு காரணத்தை வீ.ப.கா. சுந்தரம் பின்வருமாறு கூறுகின்றார்:

சட்சமம் எனும் சொல், ஆறு நரம்புகளின்று பிறந்தது எனப் பொருள்படுவது.

"குரலே துத்தம் கைக்கிளை உழையே
இளியே விளரி தாரம் என்றிவை
ஏழும் யாழின் இசைகெழு நரம்பே"

என்பது பிங்கல நிகண்டு (கழக வெளியீடு 1402 நூற்பா) இப்பாடலால் ஸ்வரம் என்பது நரம்பு எனவும், அவை ஏழு எனவும் பெறப்படும்.

## 1. குரல்

இச்சொல்லுக்கு சென்னைப் பல்கலைக்கழக் அகராதி தந்துள்ள பொருள்: ஒன்றோடொன்று சேர்ந்துள்ள சேர்க்கை:

எ-டு:- "குரல் எமை ஒரு காழ்" (கலித். 54,7)

இவ்வரிக்கு பற்று அமைந்த ஒரு மாலை என்பது பொருள். எனவே குரல் என்பது ஒன்றோடு ஒன்று சேர்ந்துள்ள சேர்க்கை அல்லது பற்றுமை எனப் பொருள்படுவது.

எனவே குரல் எனும் சொல் - சேர்க்கை அல்லது பற்றுமை என்னும் பொருண்மையுடையது. குரல் எனும் முதல்நிலை நரம்பு பிற நரம்புகட்குப் பற்றுமை தருவதால் "குரல்" எனப் பெயர் பெற்றது.

## 2. துத்தம்

(துத்தம் = ரிடபம்) "துத்தம்" குரல் இசையைக் காட்டிலும் சற்று உயர்ந்து ஒலியையுடையது குரலுக்கு அடுத்துப் பிறப்பது துத்தம் = சற்று உயர்ந்த நரம்பிசை. "துத்தம்" எனும் சொல்லின் வேர்சொல் எது? அவ்வேர் வழியாக எவ்வாறு தத்தம் பிறந்தது? அதன் பொருண்மை என்ன? உந்துதல் என்பதன் பொருள் ஏறுதல், உயருதல், எழும்புதல், "உ" எனும் சுட்டுச் சொல்லே – மேனோக்கி எழுதல் எனும் பொருளது. துத்து + எம் = த்தம், எனவே துத்தம் எனும் நரம்பிசை குரலுக்கு அடுத்து, ஏறு நிரல் வரிசையில் (ஆரோகணத்தில்) இரண்டாம் நிலையில் நிற்பது, சற்று உயர்ந்து ஒலிப்பது. ஒப்புநோக்குதற்குப் பிற சொற்கள், துதி = உயர்த்திச் சொல், புகழ், துதிக்கை = உயர்த்தும் கை.

## 3. கைக்கிளை

கைக்கிளை = (காந்தார சுவரம்) குரலுடன் இளி மிகவும் ஒன்றித்து ஒலிக்கும். குரல், இளி உறவை (ஸ .- ப) இணையம் உறவு என்றும் "குரலிளிக்கிழமை" என்றும் (ச – ப. உறவு) "பட்டடை யாகி ஒலிக்கும் உறவு" என்றும் சொல்லுவர். "இணை, கிளை நட்பு" எனும் இசை புணர் குறி நிலைகளுள்" (சிலப். 8.33-4) குரலுடன் தலையாய் ஒன்றுவது இனியே. குரலுடன் உழை கொள்ளும் ஒன்றிப்பாகிய உறவைக் - "கிளை" என்றனர். மு. ஆபிரகாம் பண்டிதர் குரலுடன் இளி கொள்ளும் உறவைக் கணவன் மனைவி கொள்ளும் உறவு போன்றது என்பர். குரலுடன் உழை கொள்ளும் உறவைச் சொந்தக்காரர் கொள்ளும் உறவு போன்றது என்பர். எனவே அது "நட்பு" எனப்பட்டது.

இவ்வாறு உறவு நிலைகள் பொருந்தி நரம்புகள் தம்முள் இசைப்பதை – ஒத்திசைத்தல் (Harmony) என்பர்."இசை புணர் குறி நிலை" என்றார் இளங்கோ அடிகளார்.

"இணைகிளை பகை நட்பு என்றிந் நான்கின் இசை புணர் குறிநிலை எய்த நோக்கி" (சிலப்.8.33-4) என்று நான்கு வகைப் படுத்தினார் இளங்கோவடிகள். நட்பானம் நரம்பு = கைக்கிளை, இது கிளைபோன்று, மிக்க உறவு கொள்ளாமல், சற்று குறைந்து உறவு கொள்வதால் சிறுமை உறவின் நரம்பு எனும் பொருள்படக் கைக்கிளை என்று பெயரிட்டனர். கை என்பது சிறுமை. கிளை என்பது உறவு. கைக்கிளை – சிறுமை உறவின் நரம்பு. அகத்திணை இலக்கணம் இங்கு நினைதற்குரியது, தலைவன் மட்டும் ஒருத்தியைக் காதலிக்கின்றான்.

அவளோ அவனைக் காதலிக்கவில்லை. இந்நிலையை "கைக்கிளை" எனச் சுட்டினர். ஆபிரகாம் பண்டிதர் கூறுவது யாதெனில், குரலோடு கைக்கிளை ஒருவாறு ஒத்திசைப்பினும் இதனைக் கேள்விக் கூட்டொலியாகக் கொள்வது கிடையாது. எனவே கைக்கிளையனது குரல் நரம்பிசையுடன் ஒருவாறு சிறந்த ஒத்திசைக்கும் காரணத்தால் இது கைக்கிளை எனப் பெயர்பெற்றது எனக் கருணாமிர்த சாகரம் விளக்குவது மிகவும் ஏற்றற்குரியது. பெரிதும் பாராட்டுதற்குரியது.

4. (உழை = மத்திமம்) உழை = பக்கம், உழையர் = பக்கத்திருப்பவர், சுற்றம்போல் (கிளைபோல்) பக்கத்திருப்பவர் கிளைபோல் குரலுடன் பொருந்தியிசைக்கும் நரம்பு – உழை எனப் பெயர்பெற்றது. குரல் உழை உறவு என்பது பக்கத்தில இருக்கும் சுற்றம் போல் உறவுத் தன்மை. உழை நரம்பு என்பது உறவினர் அல்லது சுற்றத்தார் அல்லது சொந்தக்காரர் போன்று உறவுடைய நரம்பு எனப் பொருள்படுவது.

5. இளி

குரலுடன் இளி – மிகமிகப் பொருந்தி இசைப்பது. இளிதல் என்பதற்கு அகராதிப் பொருள் - இணங்குதல். இணைதல். குரலுடன் இணைதல் என்பது ஒன்றுதல். எனவே இணையும் நரம்பே இளி நரம்பு எனப்பட்டது.

6. விளரி

(விளரி – த) இளி (ப) எனும் நரம்பினுக்கு அடுத்து ஒட்டிச் சற்று உயர்ந்து மெல்லியதாக ஒலிப்பது விளரி, விளரி = மென்மை ஒலியுடையது. விளக் - மென்மை மிக உருக்கமான, இரங்கற்குரிய மென்மையான நெய்தற் பண்ணுக்கு "விளரிப்பண்" எனப் பெயருடையமையால், விளரி நரம்பு எனும் சொல்லை விளங்கிக் கொள்ளலாம்.

7.தாரம்

"தாரம் - நி" மற்றைய நரம்புகளிலும் உச்சமான எடுத்தல் ஓசையை உடையது தாரம். தாரம் - எடுத்த ஓசை எனச் சொல்லும் கழகக் கையகராதி. மேலும் "உச்ச இசையின் பெயரே தாரம்" என வீரமாமுனிவரின் சதுரகராதி பண்டைய நூற்பாவால் விளக்குகிறது. மேலும் தாரத்திற்கு மற்றோர் பெயர் "வல்லிசை". "தாரம் உச்சமும் வல்லிசை ஆகும்" என்பது பிங்கலம். (கழக வெளியீடு 1421 நூற்பா)

தார் எனும் வேர்ச் சொல்லுக்கு "முன்னோங்கி நீண்டு உயர்ந்திருப்பது" என்பது பொருண்மை. ஓங்கியுயர்ந்த எடுத்தல் ஓசையுடைமையாலே "தாரம்" என நரம்பு பெயர் பெற்றது.

இந்த ஏழிசை நரம்புகளும் ஒலி உறவுத் தொன்மையின் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன. நரம்புகட்குப் பெயரிடும் முறை ஒவ்வொரு மொழியிலும் உண்டு கிரேக்கர் டோ, ரே. மீ. வா, ஸோ. லா, சீ என்றும், ஸ, ரி, க, ப, த, நி என்று தமிழர் பெயரிட்ட முறையிலும் காணலாம்.

இன்றைய சட்சமே பண்டைய குரல் எனினும் சிலர் இன்றைய சட்சம் பண்டைய இளி என்று கொண்டனர். (விபுலானந்தர் யாழ்நூல்: பாயிரம் (1974) ப.5)

சட்சம் - இளி ; ரிஷபம் - விளரி ; காந்தாரம் - தாரம் ; மத்திமம் - குரல் ; பஞ்சமம் - துத்தம் ; தைவதம் - கைக்கிளை ; நிஷாதம் - உழை.

இவ்வாறு கொண்டதால், ஆய்விலே ஆங்காங்கு ஒத்துவராதவை பல நேர்ந்தன அடிப்படை அமைப்புக்களில் பிழை நேர்ந்து கொண்டதெனில் மேல் கட்ட அமைப்பிலும் பிழைகள் தொடர்ந்து நேரிட்டுவிடும். ஆதலால் இன்றைய சட்சம் என்று இன்று நாம் காட்டுவதும் பண்டைய குரல் என்பதும் ஒன்றே.

அடியார்க்கு நல்லார் சட்சம் என்பது குரல் என்றே கொண்டனர். இதனை அறிவிக்கும் பகுதிகள்

(அ) "குழலிலும் யாழிலும் குரல் முதல் எழும்" என்னும் சிலப்பதிகார வரிக்கு (3:35) அடியார்க்கு நல்லார் உரை வருமாறு:

"குரல் முதலாயுள்ள ஏழிசையிலும் சரிகமபதநி என்னும் ஏழெழுத்தினையும் - இசைத்துக்காட்டல்" என்றார் அடியார்க்கு நல்லார். இவ்வாறு கூறியதால் "சட்சமே குரலாகும்" என அவர் கொண்டனர் என்பதைக் தெள்ளத் தெளிய அறியலாம்.

இதனை மேலும் ஓரிடத்தும் அடியார்க்கு நல்லார் மிகத் தெளிவுபடுத்தியுள்ளார். "ஏழு வகைப்பட்ட நிலமாவன – ச,ரி,க,ம,ப,த,நி என்னும் ஏழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்கும் குரல் முதலாகிய ஏழும்" (சிலப். 152 – 4) என்று தம் உரையுள் கூறியுள்ளார் இங்கு சட்சம் என்பது குரல் எனத் தெளிவாகக் குறித்துவிட்டார்.

## அடிப்படைப் பாலையில் குரல்:

அடிப்படைப் பாலை வலமுறைத்திரிபில் "குரல்" குரலாய செம்பாலை" எனக் குறிக்கப்படும். இதனால் சட்சமாகிய குரலே முதல் நரம்பு எனலாம்.

## இளங்கோவின் முறை:

இளங்கோவடிகள் குரலையே முதல் நரம்பாக வலமுறையிலும் இடமுறையிலும் குறித்துள்ளார் "குரல் குரலாய செம்பாலை" என்று சுட்டினால் இது வலமுறையில் பாலையாகக் குரல்குரலாக நிற்பது என அறியலாம். "குரல் குரலாக அரும்பாலை" என்றால் இது இடமுறையில குரல் குரலாய் அடிப்படைப் பாலையாகிய அரும்பாலை என அறியலாம். எனவே குரல் முதல் நரம்பு ஏழிசை நிரலை இளங்கோவடிகள் சுட்டியுள்ள இடம்.

"குடமுதல் இடமுறையாகக் குரல் துத்தம்
கைக்கிளை உழை இளி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே (சிலப். 17.8-10)

## பத்துப்பாட்டில் குரல் முதன்மை:

சிலம்புக்கும் முற்பட்ட பத்துப் பாட்டினின்றும் குரலே மிகப் பண்டுதொட்டு முதல் நரம்பாகக் கொண்டனர் என அறியலம்.

## பறவை விலங்குகளின் ஒப்புமை:

ஏழு சுரங்களுக்கும் பறவைகளின் ஒலியையும் விலங்குகளின் ஒலியையும் வடமொழி நூல்களிலும், தமிழ் நூல்களிலும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. இவையாவும் தத்தம் போக்கில் அமைத்துக் கொண்ட கற்பனை உவமைகளே என்பதை நூல்கள் தம்முள் பெரிதும் முரண்பாடுரைப்பதால் அறியலாகும். எனவே புலமைக் கற்பனையால் தத்தம் போக்கில் கூறியவற்றை ஆய்வுக்கு அடிப்படையாக விபுலானந்தர் கொண்டால்தான் இன்றைய சட்சம் பண்டைய இளி எனும் முடிவுக்கு வரநேர்ந்தது. எனவே மு.ஆபிரகாம் பண்டிதர், பி.சாம்பமூர்த்தி, எஸ். இராமநாதம், கு.கோதண்டபாணி, ஏ.இராகவன் முதலியோர் இன்றைய சட்சமும் பண்டைய குரலும் ஒன்றே என்ற முடிவுக்கு வந்தனர். அதுவே பொருத்தமுடையது. பிற்கால நூல்களில், ஏழிசைக் கோவைகளுக்கும் உயிரினங்களின் ஒலி உவமையாக கொடுக்கப்பட்டுள்ளதை ஆதாரமாகக் கொள்வது சரியல்ல என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

## குரல் முதல் தாரம் வரை வீழ்ந்த காலம்

கி.பி. 7ம் நூற்றாண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில், குளத்தூர் வட்டத்தில் உள்ள ஒரு குன்றின் மேல் அமைந்த சிகாநாதசாமி கோவிலில் இசையில் வல்ல பல்லவ மன்னன் மகேந்திரவர்மனால் கல்வெட்டு அணை ஒன்று வெட்டப்பட்டது. இது பாளி மொழியில் இருந்ததோடு ஏராளமான தமிழிசை பற்றி செய்திகளையும் கொண்டுள்ளது. அதே சமயம் இக்கல்வெட்டில் சட்ஜம் - ஸ, ரிஷபம் - ரி. காந்தாரம் - க, மத்யமம் - ம, பஞ்சமம் - ப, தைவதம் - த, நிஷாதம் - நி முதலிய ஏழ் கோவைகளின் பெயர்களும், அவற்றின் வகைகளும் காணப்படுகின்றன. இதிலிருந்து கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழகத்தின் வடபகுதியில் "சரிகமபதநி" என்ற ஏழ் கோவைகளின் பெயர்கள் செல்வாக்குடன் இருந்ததை ஆதாரபூர்வமாக அறிகின்றோம்.

"குரலே, துத்தம், கைக்கிளை, உழையே,
இளியே, விளரி, தாரம் என்றிவை
எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே
சவ்வும், ரிவ்வும், கவ்வும், மவ்வும்,
பவ்வும், தவ்வும், நிவ்வும், என்றிவை
ஏழும் அவற்றின் எழுத்தேயாகும்"
(திவாகர நிகண்டு ஒலிப்பெயர்த் தொகுதி)

"சரிகமபதநி என்(று) ஏழ் எழுத்தால் றானம்
வரிபரந்த கண்ணனாய் வைத்துத் - தெரிவரிய
ஏழிசையும் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழமுதலாம் சுத்தத்துளை" (சிலப்.17, ஆய்ச்சி . 33-80அடி)

மேற் கூறிய பாடல்கள் வாயிலாக கி.பி.8ம் நூற்றாண்டு முதல் கி.பி 11வரை இடைப்பட்ட காலப்பகுதியில் ஏழிசைக் கோவைகளாகிய "சரிகமபதநி" தமிழகம் முழுவதும் பரவியதோடு, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி. தாரம் என்ற ஏழ் கோவைகளின் வழக்கு வீழ்ந்தது என அறியப்படுகின்றது.

## முடிவுரை :

பண்டைத் தமிழிசையில் உள்ள ஏழ் கோவைகளான குரல் முதல் தாரம் வரை பெயர்களின் வழக்கு "சரிகமபதநி" என்ற ஏழ் கோவைகளும் பண்டைத் தமிழிசையில் சுமார் 6ம் நூற்றாண்டிலேயே வளர்ச்சியினை அடைந்ததோடு, இன்னும் நீடித்து நிலைபெற்று தமிழிசையிலும், கர்நாடக இசையிலும் ஏழ் கோவைகள் - வளர்ச்சியினைப் பெற்று சுரங்களின். பரிணாம வளர்ச்சியில் பங்காற்றி தமிழிசைக்குப் பெருமை சேர்த்து வருவதை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டு இன்றும் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றோம்.